www.padippakam.com

# சுமைகள்

சுமைகள்–15 ஐப்பசி, கார்த்திகை 1995 Sumaihal Nr. 15, oktober, november 1995, Tromsø, Norge Løssalg kr. 10,-

## யுத்தம் தொடர்கிறது!

# இரத்த ஆறு ஓடுகிறது!

## நாம் என்ன செய்யப் போகிறோம்?

*மக்கள் யுத்தமெனின் மக்களோடு மக்களாக நின்று தண்ணீரில் மீனாக மக்களின் பாதுகாப்பை முன்நிறுத்தி, மக்கள் நலனை முன்னிறுத்தி முன்னெடுப்பதே மக்கள் யுத்தமாகும். மக்களை யுத்த முனையில் முன்தள்ளிவிட்டு பின்நின்று தாக்குவதும் மக்களை பாதுகாக்காது இராணுவம் வரும்போது தாம் பாதுகாப்பான இடங்களுக்கு சென்று பதுங்கிக் கொள்வதும் மக்கள் யுத்தமோ அல்லது வீரமோ ஆகாது.*



இலங்கை அரசிற்கும், புலிகளுக்கும் இடையிலான யுத்தத்தில் பாரிய இழப்பை மக்கள் சந்தித்த வண்ணம் உள்ளனர். சந்திரிக்காவும் அவர் இனவாத மந்திரி சபையும் புலிகளை ஒழிக்க முற்பட்டு மக்களை கொல்லுவதுடன் அனைத்துவிதக் கொடுமைக்கு உட்படுத்துகிறது. என்றும் இல்லாதவாறு புலிகள் தரப்பு பாரிய இழப்பைச் சந்தித்தவண்ணம் உள்ளது. இது

8 பக்கம் பார்க்க ☞

## நோர்வேயில் (பேர்கனில்)

# புலிகளும், இலங்கை அரசின் பிரதிநிகளும் சந்திப்பு

### மீண்டும் போச்சுவார்தைக்கான முயற்சிகள்?

இலங்கையின் அரசியல் நிலைபற்றி மாபெரும் மாநாடு போர்கனிலுள்ள கிறிஸ்டியன் மிச்சல்சன் அரசியல் ஆய்வு நிலையமும், அரசியற் கட்சிகளின் இலங்கைக்கான ஆதரவுக்குழுவும் (ALL PARTIES SOLIDARITY GROUP FOR SRILANKA) இணைந்து கார்த்திகை 7ம் திகதி பேர்கனில் நடத்துவுள்ளன. இம்மாநாட்டில் சண்டையில் ஈடுபட்டுள்ள அரசு, புலிகள் தரப்பினரும் மற்றும் இலங்கையில் உள்ள சமூகநல ஸ்தாபனங்கள், சர்வதேச சமாதான அமைப்புக்களும் பங்கு பெற்றுகின்றன.

நோர்வே சார்பில் கிறிஸ்தவமக்கள் கட்சிப் பாராளுமன்றத் தலைவர் KJELL MAGNE வும், வெளிநாட்டு அலுவல்கள் அமச்சின் செயலாளர் JAN EGELAND பங்குபெற்றுகின்றனர்.

சமாதான முயற்றிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அடிப்படையாகவே இம்மாநாடு நடத்தப்படுவதாக சுமைகளுக்கு தெரியவந்துள்ளது. மேலும் கடந்தவாரம் நோர்வே அரசியற் கட்சிகளின் இலங்கைக்கான ஆதரவுக்குழு வெளிநாட்டு அமைச்சுக்கு தமிழ் மக்கள் நிலையை விபரித்து கடிதம் அனுப்பியுள்ளனர்.

மேற்படி சமாதான முயற்சிகள் வரவேற்கத்தக்கது தான் ஆனால் மக்கள் சுயமாக, தாமாகவே கூடிநின்று முன்னெடுக்கும் சாமாதான முயற்சிக்கு சமமாகாது. வெளிநாடுகளில் சமாதான ஒப்பந்தத்தை உருவாக்கி மக்கள் தலையில் சுமத்துவதை நாம் விரும்பவில்லை. ஆனால் பெரும்பான்மையான நோர்வேயில் உள்ள தமிழ் அமைப்புகள் இம்மாநாட்டில் பங்குபற்றி இம்மாநாட்டில் என்ன நடக்கின்றது என்பதை அறிந்து கொள்வதன் மூலம் இச்சமாதான முயற்சிபற்றி மக்கள் மத்தியில் சரியான விமர்சனத்தை வைக்கமுடியும்.

*உலகத் தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட மக்களே ஒன்று சேருங்கள்!* ***Arbeidere og undertrykte i alle land - foren dere!***

படிப்பகம்

www.padippakam.com



## சுமைகள்

யுத்தம், யுத்தம், யுத்தம், இரத்தம், கொலை, அரசியல், புலி அரசு இதைவிட வேறென்ன எழுதுவது.

பலவருடங்களாக நாம் உட்பட அனைத்துப் பத்திரிகைகளுமே மேற்கூறிய விடையங்களைப் பற்றியே எழுதிக் கொண்டு வருகின்றன. இன்னும் பலவருடங்களுக்கு இந்த நிலை தொடருமோ என நாம் அஞ்சுகிறோம்.

யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். நிறுத்தப்பட வேண்டுமானால் அரசு, புலிகள் தவிர்ந்த மாற்று சக்திகள் உருவாக்கப்படவேண்டும். மாற்று சக்தி உருவாவதற்கு புதிய கருத்துக்களை, சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட விவாதம் மக்கள் மத்தியிலும், மக்கள் நலனில் அக்கறை கொண்ட ஜனநாயக சக்திகள் மத்தியிலும் தொடரப்படவேண்டும்.

புலம் பெயர்ந்த நாடுகளிலும், இலங்கையிலும் 86 ஆம் ஆண்டிற்குப் பின் அனைத்து இயக்கங்களும், சக்திகளும் புலிகளால் அழிக்கப்பட்டபின் புதிய சக்தியை உருவாக்குவதற்கானமுதல் முயற்சியாக விவாதங்களில் ஈடுபட்டனர். பலசஞ்சிகைகள், பத்திரகைகள், விவாத அரங்கங்கள் கலை இலக்கிய சந்திப்புகள் மேற்படி புதிய சக்தி உருவாக்கத்தை முன்னேடுப்பதற்காகவே ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் தற்போது ஒன்று அல்லது இரண்டு பத்திரிகைகளும், பத்து அல்லது பதினைந்து தனிநபர்களையும் தவர்த்தி மீதமான பலநூறு போராட்ட அக்கறை கொண்ட மனிதர்கள் இன்று சீரழிந்த நிலைக்க தள்ளப்பட்டு முற்று முழுதாக அரசியலில் இருந்து விலகிவிட்டனர். இவ்வாறு விலகியயதனை, நாம் அவர்கள் மக்கள் மீது கொண்ட நம்பிக்கையீனம் என்றே பார்க்கத் தோன்றுகின்றது. இருக்கும் குறிப்பிட் சிலர் தம்மாலான முயற்சிகளை முயற்சிக்காது சோர்ந்த வண்ணம் உள்ளதால் இன்று தம்மை அறிஞ்ஞர்களாக காட்டிக்கொண்டு தம்தான் மக்களின் ஒரே பிரதிநிதிகள் என மக்களை விற்றுப் பிழைக்கும் பலர் மக்கள் மத்தியில் பெரியவர்களாகி மக்களை ஏமாற்றிப் பிழைத்துக் கொண்டிருக்கின்றனர். இவற்றிற்கு முடிவுகட்ட வேண்டுமாயின் மீண்டும் மக்கள் நலனில் அக்கறைகொண்டவர்களின் உருவாக்கம் அதிகளவு தேவைப்படுகின்றது.

# பிஞ்சுகளைக் குதறும்

லீனா பெர்னாட் என்ற சுவீடன் நாட்டு நடிகையும் அவளது காதலனும் போதை மறுந்துக் கடத்தல் குற்றத்திற்காக கோவாவில் கைது செய்யப்பட்டனர்.அவர்கள் மீதான வளக்கு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட போது அதிர்ச்சியூட்டும் பல புதிய செய்திகள் வெளிவரத் தொடங்கின. கோவாவில் அனாதைச் சிறுவர்களுக்கான "ஆச்சிரமம்" நடத்தும் ஃபிரெட்டி பீட் என்பவனை இவ்வழக்குத் தொடர்பாக காவல் துறையினர் சோதனையிட்ட போது இந்தியச் சிறுவர்கள் பலருடன் அவன் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவதை சித்தரிக்கும் புகைப்படங்கள் நூற்றுக் கணக்கில் சிக்கின.

வாடிக்கையாளர்களைக் கவர்வதற்காக சாம்பிள்களாகவும், கோவாவிற்கு சுற்றுலா வருமாறு அழைக்கும் அழைப்பிதளாகவும் அவை பயன்படுத்துப்படுகின்றன. நூற்றுக்கணக்காண அத்தகைய புகைப்படங்களை ஜேர்மனி மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு அவன் அனுப்பி வைத்திருந்ததும் தெரியவந்தது. விபச்சார விடுதிகளாக பயன்படுத்தி வந்த இரு இடங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

"குழந்தை விபச்சாரத்தின் சொர்க்கம் என்று கூறப்படும் தாய்லாந்தில் சமீபத்தில் அரசுக் கெடுபிடிகள் அதிகமாகிவிட்டதால் பொருத்தமான பாதுகாப்பான வேறொரு இடத்தை தெற்காசியப் பகுதிகளில் தெரிவு செய்ய வேண்டிய நெருக்கடி இந்தச் சுற்றுலாத் தொழில் அதிபர்களுக்கு ஏற்பட்டுள்ளது. கோவா அதற்குப் பொருத்தமான இடம். பெண்களையும், சிறுவர் சிறுமிகளையும் இந்த வட்டாரத்தில் கொண்டு வந்து குவிக்க அவர்கள் திட்டமிட்டுள்ளுனர்" என்று கூறுகிறது இன்ரர்போல் என்ற சர்வதேசக் காவல்துறை.

இது இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டில் சமீபத்தில் வெளியான சிறியதொரு செய்தித் துணுக்கு. போபர்ஸ் பீரங்கி பேர ஊளல் குறித்த செய்தியும் முதன் முதலில் வெளிவந்த போது செய்தித்தாளில் இரண்டங்குல அகலம் நாலங்குல உயரம் தான் இருந்தது.

'வியட்நாமை ஆக்கிரமித்திருந்த அமெரிக்க இராணுவச் சிப்பாய்கள் ஓய்வெடுப்பதற்கும், பொழுது போக்குவதற்கும் தாய்லாந்தைப் பயன்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தம் 1967 இல் அமெரிக்காவுடன் கையெழுத்தானபோது அதன் விபரீதத்தை தாய்லாந்து மக்கள் அறிந்திருக்கவில்லை.

1971 இல் உலகவங்கித் தலைவா மெக்னமாராவின் ஆணைப்படி உலகவங்கியின் உதவியுடன் சுற்றுலா வளர்ச்சித் திட்டங்கள் நாடெங்கம் அறிவிக்கபட்ட போதும் விசயம் இன்னதென்று தாய்லாந்து மக்கள் புரிந்து கொள்ளவில்லை.

1975 இல் "பொழுதுபோக்க வளாகங்கள் சட்டம்" என்றொரு புதிய சட்டத்தைத் தாய்லாந்து அரசு கொண்டு வந்த போது அச்சட்டத்தில் சிறப்பு சேவைகள் என்ற பெயரில் மசாஜ் விடுதிகளுக்கும், கேளிக்கை என்ற பெயரில் ஆடை அவிழ்ப்பு நடனங்களுக்கும் அனுமதி அளிக்கப்பட்டு இருப்பதைப் பார்த்தபோதுதான் சதித்திட்டம் பல பெருக்கு புரியத் தொடங்கியது. ஆனால் அதற்குள் காலம் கடந்து விட்டது. அந்த எட்டு ஆண்டுகளுக்குள் நாடெங்கும் 20.000 புதிய விபச்சார விடுதிகள் தோன்றிவிட்டன. அமெரிக்க ஐரோப்பிய யாத்ரீகர்களின் விபச்சாரத் திருத்தலமாக தாய்லாந்து மாற்றப்பட்டுவிட்டது.

மக்களின் வறுமையும், நாட்டின் அந்நியக் கடன் சுமையும் அதிகரிக்க அதிகரிக்க, அதே வேகத்தில் விபச்சாரமும் அதிகரிக்கத் தொடங்கியது.

இன்று விபச்சாரத்திற்கு விரட்டப்பட்டிருக்கும் 12 வயதிற்குட்பட்ட தாய்லாந்து நாட்டுச் சிறுவர்கள் மற்றும் சிறுமிகளின் எண்ணிக்கை 6லட்சம். 18 வயதிற்குட்பட்டவர்கள் என்று பார்த்தால் 20 லட்சம். சுமார் 5 அல்லது 6 கோடி ஜனத்தொகை கொண்ட ஒரு நாட்டில் 18 வயதிற்குட்பட்டோரின் எண்ணிக்கை 2 கோடி எண்று வைத்தாலும் விபச்சாரத்தில் ஈடுபட்வர்கள் அதில் 10 சதவீதம் பேர்.

தாய்லாந்தில் வடபகுதி எல்லையோரம் உள்ள கிராமங்கள் அனைத்தையும் நேரில் பார்த்த ஒரு அமெரிக்க நிருபர் எந்தக் கிராமத்திலும் சிறுமிகளையே பார்க்க முடியவில்லை என்கின்றார். தாய்லாந்தின் வடபகுதியிலிருந்த அடர்ந்த காடுகளை வெட்டி ஏற்றுமதி செய்து அப்பகுதியை பொட்டலமாக்கிவிட்டது அரசு. பாரம்பரியமாக காடுகளைச் சார்ந்து வாழ்க்கை நடத்தி வந்த கிராமப்புற மக்கள் தங்கள் வயிற்றுப் பாட்டுக்காகப் பெண்பிள்ளைகளை விற்று விடுவது சகஜமாகிவிட்டது.

தாய்லாந்தில் ஒரு சிறுமியின் விலை 8000 டொலர்கள். ஜப்பானில் உள்ள விபச்சார விடுதிகளுக்கு 14000 டொலர்களுக்கு அவர்கள் விற்கப்படுகிறார்கள். அந்தத் தொகை அப்படியே இரட்டிப்பாக்கப்பட்டு 30000 டொலர் திருப்பிக் கட்டினால் தான் விடுதலை என்று அச்சிறுமிகளை விடுதிக்குள்ளேயே சிறை வைத்திருக்கின்றனர், விபச்சார விடுதிகளை நடத்தும் மாஃபியா குண்டர்கள்.

"இன்னேரு பிறவி எடுத்தாலும் இந்தத் தொகையை அடைக்கமுடியாது, பாலியல் வன்முறையையும் சகிக்க முடியாது" என்ற நிலையில் சித்திர வதைக்கும் சாவுக்கும் அஞ்சாமல் விடுதியை விட்டுத் தப்பி ஓடிவந்து தாய்லாந்து துாதரகத்தில் சரணடைகின்றனர் நூற்க்கணக்கானசிறுமிகள். இப்படி ஒவ்வேரு மாதமும் தாய்லாந்துக்கு திருப்பி அனுப்பப்படும்தப்பி வந்த சிறுவர்களின் எண்ணிக்கை 250. கிராமங்களில் இருந்து விலைக்கு வாங்கப்பட்டு இவ்வாறு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவோர் போக மற்ற சிறுமிகள் தலைநகர் பாங்கொக்கில் உள்ள விபச்சார விடுதிகளுக்கு விற்கப்படுகின்றனர். அந்நிய செலாவாணியை அள்ளித் தருகின்ற அமெரிக்கர்களும், ஜப்பானியர்களும் தான் இங்கே பிரதான வாடிக்கையாளர்கள்.

"தாய்லாந்திற்கே உரிய கதகதப்பை வழங்கும் குட்டி அடிமைகள்", "சொன்னபடி யெல்லாம் கெட்டு நடக்கும் பெண் பிஞ்சுகள்" என்று வக்கிரமாகவும் பச்சையாகவும் விளம்பரம் செய்து காமவெறிபிடித்த வாடிக்கையாளர்களைக் கவர்கின்றன "ஐரோப்பிய செக்ஸ் சுற்றுலா நிறுவனங்கள்". ஒரு இளம் பெண்ணை மேற்சட்டையில்லாமல் புகைப்படம் எடுத்து அப்படத்தை காதல் சின்னத்துக்குப் பொருத்தி தாய்லாந்திலிருந்து காதலுடன் என்று அச்சிட்டு விமானப் பயணிகளுக்கு விநியோகிக்கிறது இன்னேரு நிறுவனம். உலகில் எந்த நாடுகளில், எங்கெங்கே ஓரினச் சேர்க்கைக்கான ஆண், பெண் கிடைக்கின்றனர் என்ற பட்டியலை ஜெர்மனி ஓரினச் சேர்க்கையாளர் அமைப்பு நடத்தும் பத்திரிகையில் பல மொழிகளில் வெளிவருகிறது.

"பருவமடைந்த விலைமாதர்களுடன் உறவு கொண்டால் 'எயிட்ஸ்' அபாயம் - சிறுமிகள் என்றால் அந்தப் பிரச்சனை இல்லை" என்று பெய்பிரச்சாரம் செய்யப்பட்டுள்ளதால் வெள்ளைக் காமவெறியர்களின் பார்வை முழுவதும் சிறுமிகள் மீது திரும்பி விட்டது. பருவம் வராத நிலையில் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படும் 8 முதல் 12 வயதிற்குட்பட்ட சிறுமிகள் கடுமையான இரத்தப் போக்கிற்கு ஆளாகின்றனர். அதணுடாகவே வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்தும்படி அவர்கள் நிற்பந்திக்கப்படுகின்றனர். விளைவு 6 லட்சம் சிறுவர்களில் பாதிப் போர் எயிட்ஸ் நோயாளிகளாகியுள்ளனர்.


வங்கி கணக்கு இலக்கம்
8245 40 59545
Sparebanken Nor
தபால் கணக்கு இலக்கம்
0826 08 68293
சந்தா வருடம் 60 குரோணர்
வெளிநாடு 10 us $

**Redaksjon:**
Sumaihal redaksjonskommite med dyktig støtte av Ulrik M. Gjølstad og Sturle D. Tvedt, t.siva,a.mari
**Produksjon og distribusjon:**
Sumaihal aktivistgruppe - Norge.

**Layout og produksjonsansvarlig:**
Henrik Ormåsen.
**Trykk:**
Bladet Tromsø i et opplag på 1500
**Postadresse:**
Boks 415, 9001 Tromsø


படிப்பகம்

www.padippakam.com



# சீமைப்பன்றிகள்

நோயாளிகள் எனத் தெரிந்ததும் அச்சிறுமிகள் சொந்தக் கிராமத்திற்கே விரட்டிவிடப்படுகின்றனர். எயிட்ஸின் தாக்குதலுக்கு ஆளாகாமல் இருந்த கிராமப் புறங்களிலும் இதன் காரணமாக எயிட்ஸ் பரவிவிட்டது.

பெண்ணுரிமை அமைப்புக்களும், குழந்தை நல அமைப்புக்களும் இந்தக் கொடுமைக்கெதிராகப் போட்ட கூச்சலை நேற்றுவரை எந்த ஐரோப்பிய, அமெரிக்கக் கனவானும் காதில் வாங்கவில்லை. ஆனால் இன்று தங்கள் குரல் ஆச்சரியம் தொனிக்க, அப்படியா, தாய்லாந்துச் சிறுமிகளா விபச்சாரத்தில் ஈடுபடுகிறார்கள்? எவ்வளவு பேர் இருப்பார்கள்? என்று ஒன்றுமே தெரியாதவர்கள் போலக் கேட்கிறார்கள்.

இன்று அவர்கள் கேட்பதற்குக் காரணம் தாய்லாந்துக் குழந்தைகள் மீதுள்ள அனுதாபமல்ல. விளையாடப் போன தங்கள் அருமைக் குடிமக்கள் எயிட்ஸை வாங்கி வந்து விட்டார்களே என்ற வருத்தம் தான். புதிதாக ஏதேனும் பாதுகாப்பான நாட்டை ஏற்பாடு செய்ய வேண்டுமே என்ற கவலைதான்.

ஆர்மைன் என்ற தாய்லாந்துச் சிறுமி விபச்சாரத்தில் தள்ளப்படும் போது அவளது வயது 12. பருவத்திற்குக் கூட வரவில்லை. கடற்கரையோர உணவு விடுதியில் நல்ல வேலை வாங்கித்தருகிறோம் என்று பொய் செல்லி அவளது ஏழைப் பெற்றோரை ஏமாற்றி விபச்சாரத்திற்கு பேர்போன புக்கேட் நகரில் கொன்டுவந்து விற்றுவிட்டார்கள் விபச்சாரத் தரகர்கள்.

"ஒரு இரவுக்கு குறைந்தது 3 பேர். எல்லோரும் அமெரிக்கர்கள், ஜப்பானியர்கள், ஐரோப்பியர்கள் தான்". என்கிறாள் ஆர்மைன். இரண்டாண்டுகள் இந்த நரகத்தில் உழன்றபின் அவளை விடுவித்தது காவல்துறை. ஆனால் அதற்குள் அவள் எயிட்ஸ் நோயாளி ஆகிவிட்டாள்.

இந்தியாவில் 4லட்சம் சிறுவர் சிறுமிகள், பிலிப்பைன்சில் 60.000 பேர், பிரேசில் 2.5 லட்சம்பேர். அநேகமாக எல்லா ஏழை நாடுகளும், முன்னாள் சோசலிச நாடுகளும் அமெரிக்கா ஐரோப்பா காமவெறியர்களின் விரந்தினர்களாகி விட்டனர்.

இலங்கைத் தேயிலை அலுத்துப் போய் இப்போது பால் மணம் மறக்காத சிறுவர்களைக் கேட்கிறார்கள், மேல் நாட்டுச் சுற்றுலாப் பயணிகள். இவர்களின் ஓரினச் சேர்க்கைக்கு பலியாக்கப்பட்டு வரும் சிறுவர்களின் எண்ணிக்கை 40000.

தனியார் மருத்துவமனைகளைச் சுற்றிலும் மருந்துக் கடைகள் பெருத்திருப்பது வழக்கம். ஆனால் பம்பாயில் சில நட்சத்திர மருத்துவமனைகளைச் சுற்றி விபச்சார விடுதிகள் ஏராளமாக முளைக்கின்றன. அந்நியச் செலாவாணியைக் குறிவைத்தே துவக்கப்பட்டிருக்கும் இந்த மருத்துவ மனைகளில் தலைவலி, காச்சல் என்று ஏதேனும் ஒரு சாக்கைச் சொல்லி நோயாளியாகச் சேர்ந்துவிடும் அரேபிய ஷேக்குகள் தங்களுக்குத் தேவையான சிறுமிகளை பாதுகாப்பாக அங்கே வரவழைத்துக் கொள்கின்றார்கள்.

வேலைவாய்பு கிடைக்கும் என்று நம்பி ஏமாந்து விபச்சாரத்தில் தள்ளப்பட்ட டொமினிக்கான் குடியரசைச் சேர்ந்த ஒரு இளம் பெண்ணின் பேட்டியை பி.பி.சி தொலைக்காட்சி ஒலிபரப்பியது. "அவர்கள் என்னை அடித்தார்கள், சுடுவைத்தார்கள், பட்டினி போட்டார்கள். 5 நாளுக்கு மேல் என்னால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. கடைசியில் என் தன் மானத்தையும், கன்னித்தன்மையையும் வெறும் 25 டெலருக்கு இழந்தேன்." என்று கண்ணீர் வழிய வழியக் கூறினாள் அந்தப் பெண்.

தங்கள் நாட்டின் இறமையையும் மானத்தையும் சில லட்சம் டொலர்களுக்கு அமெரிக்காவுக்கும் உலக வங்கிக்கும் விற்று விட்ட நாடுகளின் பெண்களெல்லாம் தங்கள் மானத்தை ஓரிரண்டு டொலர்களுக்கு விற்க நேர்வது தவிர்க்க முடியாது. பிரேசில், மெக்சிக்கோ, பிலிப்பைன்சு, தாய்லாந்து——— அடுத்து இந்தியா.

"நமது மரபென்ன, பண்பாடென்ன, வரலாறென்ன! வியிற்றுப் பசிக்காக பெற்ற பிள்ளையை விற்கத் துணியும் தாய்லாந்து விவசாயியைப் போல நம் நாட்டு மக்கள் ஒருக்காலும் நடந்து கொள்ள மாட்டார்கள்" என்று யாரும் ஆறுதலடைந்து கொள்ள வேண்டாம்.

'பசிவந்திடப் பத்தும் பறந்து போகும்' என்பது தமிழ் பழமொழியல்ல, உலகப் பொதுமொழி. வயிற்றுக்காக சிறுநீரகத்தை உயிரை பணயம் வைக்கத் துண்டும் ஏழ்மை சிறுவர்களை மட்டும் விட்டு வைக்குமா? மீட்க முடியாது என்று தெரிந்தே செந்தப் பிள்ளையைக் கொத்தடிமையாக விற்கத் தூண்டும் வறுமை, அத்துடன் நிறுத்திக் கொண்டு விடுமா? உலகின் ஒரே இந்து நாடான நேபாளத்திலிருந்து சிறுமிகளும் பெண்களுமாக ஆண்டுக்கு 7000 பேர் பம்பாய் சிவப்பு வி□□□3பகுதிக்கு இற்குடதியாகிறார்களே அது எப்படி?

நேபாளத்திலிருந்து கடத்தி கொண்டு வரப்பட்ட ஒரு 14 வயதுச் சிறுமியை பம்பாய் விபச்சார விடுதியொன்றில் வைத்து 3 வாரமாக சித்திரவதை செய்தார்கள். அவள் எதிர்த்து நின்றாள். பிறகு ஒரு இருட்டறையில் நல்லபாம்புடன் சேர்த்து அடைத்தார்கள் அச்சத்தில் உறைந்து போனாள். இரண்டு நாட்கள் கழிந்தன. மூன்றாம் நாள் இணங்கினாள்.

தாய்லாந்தின் ஈவிரக்கமற்ற விபச்சார்த் தரகர்களைப் போல 8 வயதுக் குழந்தையைக் கொண்டு வந்து விபச்சாரியாக்குவது நம் நாட்டில் நடக்குமா என்ற ஐயம் யாருக்கும் இருக்க வாய்ப்பில்லை. ஏற்கனவே அது நடந்து கொண்டு தான் இருக்கிறது. சிறுநீரகத் திருட்டின் தரகர்கள் வேறெந்த ரகம்?

மண்ணையும், மக்களையும் அந்நியனுக்கு கூட்டிக் கொடுக்கும் தரகர்கள் வாழும் நாட்டில் பெண்ணையும் குழந்தையையும் அவனுடைய படுக்கை அறைக்கு விற்கும் தரகர்களா இல்லாமல் போய்விடுவார்கள்?

"அது ஒன்றும் கஸ்டம் இல்லை ருமேனியாவுக்குப் போனேன். கேட்பாரில்லாத பெண்கள் யாரென்று தேடினேன். அவர்களை அழைத்து வந்து பெல்ஜியத்தில் விற்றுவிட்டேன் பிறகு அவர்கள் பல கைமாறி விற்கப்பட்டார்கள். எனினும் கேட்பதற்கு ஒரு நாதியும் கிடையாது. தொழில் ரொம்ப சுலபம். ஒருகிலோ ரொட்டியை விற்பது போலத் தான்." என்று தொலைக்காட்சிக்குப் பெட்டி கொடுத்தான் ஹங்கேரி விபச்சாரத்தரகன். முதலாளித்துவம் வெற்றிக் கொடி நாட்டிய நாடல்லவா.

"ஒன்று மதம் இன்னேன்று பொலிசு இவை இரண்டும் தான் விபச்சாரத்தை ஒழிப்பதற்க அவர்கள் வைத்திருக்கும் ஆயுதங்கள்." என்று கேலிசெய்தார் லெனின். ஆனால் ஏட்டளவில் விபச்சார ஒழிப்புப்பற்றிப் பேசிய காலம் கூட இன்று ஒழிந்துவிட்டது.

"குழந்தை உழைப்பைத் தடைசெய்வோம்" என்று முழங்கிவிட்டு இன்று குழந்தைத் தொழிலாளர் நலச்சட்டம் கொண்டுவந்து அதையே ஊக்கப்படுத்தி ஒழுங்கு படுத்துவது போல.

விபச்சாரத்திற்கும் ஒரு வழிகண்டு பிடித்து விட்டார்கள். 'விலைமாதர்கள்' என்ற சொல் அவர்களை இழிவு படுத்துவதால் (நன்றாகக் கவனியுங்கள் அந்தத் தொழில் அல்ல, சொல்தான் அவர்களை இழிவு படுத்துகிறதாம்) பாலியல் தொழிலாளர்கள் என்ற புதிய 'கவுரவ'மான சொல்லை அறிமுகப்படுத்துகின்றன முதலாளித்துவப் பத்திரிகைகள்.

சிவகாசி, மத்தாப்பூவுக்குக் குழந்தைகள் 'தவிர்க்கவியலாத' தேவையாகி விட்டதைப் போல. நாளை சுற்றுலா வளர்ச்சிக்கும் அன்னியச் செலவாணி வருவாய்க்கும் குழந்தைகள் தவிர்க்க முயலாத தேவையாகலாம். "பருவம் வராத பாலியல் தொழிலாளர்கள்" என்றொரு புனிதப் பெயர் சூட்டி இதையும் இந்த அரசு நிறுவனமாக்கி விடலாம்.

பாலுறவு என்றால் என்ன வென்று தெரியாத, அதற்குரிய பருவமும் வராத சிறுவர்களும், சிறுமிகளும் விபச்சாரத்தில் உட்படுத்தப்படுவதன் சமூக விளைவுகள் என்ன? சில ஆண்டுகள் இத்தகைய பாலியல் வன்முறைக்க ஆளாக்கப் பட்டபின் ஒரு வேளை அவர்கள் விடுவிக்கப் பட்டாலும் அவர்கள் மனநிலை என்னவாக இருக்கும்? வாழ்க்கை மதிப்பீடுகள் என்னவாக இருக்கும்?

"திரும்பவும் எங்கள் நாட்டுக்குப் போய் என்ன செய்வது? குடும்பத்தோடு பட்டினி கிடப்பதா ஆணாயிருந்தால் எவனையாவது கொலை செய்து விட்டுப் பணம் திருடியிருப்பேன். பெண் என்பதால் விபச்சாரி ஆகிவிட்டேன்" என்றாள் பம்பாய் விடுதி ஒன்றில் இருந்து மீட்கப்பட்ட ஒரு நேபாளப் பெண்.

விபச்சாரத்தில் ஈடுபட்டுள்ள அமெரிக்கா சிறுவர்களில் கணிசமானோர் அவ்வப்பொதைய கைச்செலவுக்காக 'தொழிலில்' ஈடுபடுகிறார்கள் என்றது ஒரு அமெரிக்க ஆய்வு. இங்கே இரு நகரங்களில் தோன்றிவிட்டது இந்தப் பண்பாடு.

பம்பாய் விபச்சார விடுதியில் இருந்து தமிழ் நாட்டுக்கு மீட்டு கொண்டுவரப்பட்ட பெண்களில் சிலர் திரும்பவும் அங்கேயே சென்றுவிட விரும்பினர். காரணம்? "இந்த நரகத்துக் அந்த நரகமே மேல்" என்பது தான் அவர்கள் பதில்.

தாய்லாந்தின் மரமும், இலங்கையின் தேயிலையும், வங்காளத்தின் சணலம், காஷ்மீரின் பனிமலையும், பாங்கொக்கின் பெண்களும், கோவாவின் சிறுவர்களும் தங்கள் நுகர்வுக்காகவே இறைவனால் படைக்கப்பட்டிருக்கின்றன என்று கருதும் சொர்க்கபுரி வாசிகளான அமெரிக்கர்கள் என்ன சொல்கிறார்கள்?

மீண்டும் வியத்நாம்" என்ற தலைப்பில் அமெரிக்காவில் இருந்து வெளிவரும் நியூஸ்வீக் வாரஇதழ் (நவ 94) வெளியிட்டுள்ள புகைப்படக் கட்டுரை கீழ்கண்டவாறு துவங்குகிறது.

"வியட்நாமைப் போல எந்தவெரு நாடும் அமெரிக்க மனங்களை ஆக்கிரமித்ததில்லை. ஒரு தலைமுறைக்கு முன் அமெரிக்க ரத்தத்தையும், செல்லங்களையும் ஏராளமாக உறிஞ்சிக் குடித்த ஒரு சிறிய ஏழை நாடு வியட்நாம்" அமெரிக்க போர் விமானங்கள் வீசிய குண்டுகளின் கந்தக நெடிகூட இன்னும் வியட்நாம் மண்ணிலிருந்து நீங்கவில்லை, அதற்குள் வரலாற்றைத் தலைகீழாகத் திரிக்கும் இந்தக் கயவர்கள் தான் இப்பொது கோவாவிற்கு வருகிறார்கள்.

தாய்லாந்தைக் குதறிய நாய்கள் இப்போது தங்கள் பார்வையை நம்பக்கம் திருப்பியுள்ளன.இந்தியாச் சிறுமிகளை விபச்சாரிகளாகவும், சிறுவர்களை விபச்சாரர்களாகவும் மாற்றியபின், எழுதுவார்கள்.

"இந்தியா– தனது சிறுமிகளையும், சிறுவர்களையும் வைத்து அமெரிக்க இழைஞர்களை மயக்கி அவர்களது செல்வத்தையும் ஏமாற்றிப் பிடுங்கிக் கொண்ட வேசிகளின் தேசம்" என்று. அனுமதிக்கப் போகிறோமா இந்த அமெரிக்க நாய்களை?

இக்கட்டுரை இந்தியாவில் இருந்து வெளிவரும் புதிய கலாச்சாரம் என்ற சஞ்சிகையில் இருந்து மீள் பிரசுரம் செய்கின்றோம். சென்ற இதழிலும் சிறுவர்கள் மீதான பாலியல் பலாத்காரத்தைப் பற்றி ஒரு கட்டுரை பிரசுரித்திருந்தோம்.

படிப்பகம்

www.padippakam.com



# புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ் இலக்கியபடைட்

இக்கட்டுரையில் புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழர் இலக்கியமும், படைப்பாளிகளும், இவர்கள் அரசியல் பற்றிய சில கருத்துக்களை சொல் முயல்கிறோம்.

இக்கட்டுரையில் குறிப்பிடப்படுபவர்கள் யாவர் எனில் தங்களை மாக்ஸிச, லெனினிச படைப்பாளிகள் எனவும், முற்போக்கு இலக்கியம் படைப்பவர்கள் எனவும் தங்களைக் காட்டிக் கொள்பவர்களையே குறிப்பிடுகின்றோம். மேலும் இவ்வரையறைக்குள் புலியெதிர்ப்பாளர்களாக தம்மைக் காட்டிக் கொள்வோரும் அடங்குவர். மொத்தத்தில் கலைஇலக்கிய அரசியல் வாதிகளாக இவர்கள் தம்மை வெளிப்படுத்துகின்றனர்.

எம்மைப் பொறுத்த அளவில் முற்போக்கு என்பதும், முற்போக்கு இலக்கியம் என்பதுவும் மக்கள் நலனின் அடிப்படையில் சமூகமாற்றத்திற்கு, மானிட முன்னேற்றத்திற்கு, அடிமைத் தன்மையை உடைப்பதற்கு செவை செய்வதாகும். கல்வி, அந்தஸ்து, பரம்பரைக் கவித்துவம், அரசியல் இயக்க சார்பு, ஐரோப்பிய இலக்கிய அறிவு எதுவும் மேற்கூறிய வரையமுறைக்குள் அடங்காவிட்டால் அவை முற்போக்காக முடியாது.

ஏன் மார்க்ஸிய தத்துவத்தை நெட்டுருப் போட்டாலும், மாவோ சிந்தனையை மனப்பாடம் செய்து அடிப்படையில் நடைமுறைவாழ்வு நடத்தாமல் கவிதையிலும், நாடகத்திலும் மட்டும் மார்க்ஸிச லெனினிசம் இருந்தால் அதுவும் முற்போக்காக முடியாது.

"எந்தவர்க்கம் ஆதிக்கத்தில் உண்டோ அவ்வர்க்கத்தின் சிந்தனையே சமூகத்தை ஆழுகிறது" என்றார் மார்க்ஸ். தற்போது முதலாளித்துவமும், அதனடிப்படை வளர்ச்சியான ஏகாதிபத்தியத்தினதுமான பூர்சுவா (மோலாதிக்க வர்க்கம்) வர்க்க சிந்தனையே சமூகத்தில் புரையோடிப் போயுள்ளது ஐரோப்பாவில். அதேவேளை நாம் தேசத்தை எடுத்துக் கொண்டால் அங்கு அரைநிலப்பிரபுத்துவ, பூர்சுவா கலாச்சாரம் மேலோங்கியுள்ளது.

அரைநிலப்பிரபுத்துவ கலாச்சாரத் தன்மைகளைக் கொண்ட மக்கள் ஐரோப்பாவுக்கு புலம் பெயரும் போது ஐரோப்பிய ஏகாதிபத்திய கலாச்சாரத் தாக்குதலுக்கு உட்படுத்தப்படுகின்றது. நிலப்பிரபுத்துவக் கலாச்சாரம்.

இந்த நிகழ்வானது எம்மில் பலரை ஐரோப்பிய கலாச்சாரத் தன்மையில் சீரழிந்த பக்கத்தை மிவிரைவில் எமதாக்கிக் கொள்ள வளிவகுக்கிறது. காரணம் எம்நிலப்பிரபுத்துவத் தண்மையான அடுத்தவன் மீது ஆதிக்கம் செலுத்தும் தண்மை, பொருள் சேற்பு, கலாச்சாரம், மதம், வாழ்வியல் பற்றிய அடிப்படை வாதம் போன்ற தன்மைகள் ஐரோப்பிய முதலாளித்துவ சமூகத்திலும் மேலோங்கியுள்ளது. மேற்கூறிய எம் சமூகத்தன்மை இங்கு நுகர் பொருள் கலாச்சாரமா வடிவெடுத்துள்ளது.

நுகர்பொருள் கலாச்சாரத் தன்மை என்னவெனில் உற்பத்தியாளர்களால் அல்லது மூலதன சக்திகளால் (மக்களின் பாவனையைக் கருத்தில் கொண்டு) அடிப்படைத் தேவைக்கு அப்பாற்பட்ட (உணவு, உடை, உறையுள்) டாம்பீக உல்லாச வாழ்கைச் சிந்தனைக்கு தீனிபோடும் பொருட்களை உற்பத்தி செய்வதும் விளம்பர மூலம் வியாபாரச்சந்தைகளில் விற்பனைப் படுத்துவதுமாகும். உற்பத்தியாளர்களின் நோக்கம் மேலதிக மூலதன வளர்ச்சியாகும் – லாபமடைதலாகும். இதனடிப்படையில் இவர்களின் இலாப நோக்கமானது விளம்பர மூலம் மக்கள் மத்தியில் தேவையை உண்டுபண்ணுகிறது. உதாரணமாக சவற்காரத்தை கவனிப்பீர்களாமின் பலதரப்பட்ட சவற்காரங்கள் விளம்பரப்படுத்தப்படுகின்றது. இதில் விளம்பரப்படுத்தப்படும் ஒவ்வொரு சவற்காரமும் ஒன்றில் இருந்து மற்றோன்று மாறுபட்டதாகவும், மாறுபட்ட தன்மைகளை உவலுக்கு ஏற்படுத்துவதாகவும் கூறப்படுகிறது. உதாரணமாக லக்ஸ் சவற்கார விளம்பரத்தில் "பட்டு மேனியில் பளபளப்பு ஏற்பட பாவியுங்கள் லக்ஸ்" மற்றோரு சவற்காரமான பல்முலீவ் விளம்பரத்தில் "மென்மையான உடலை வைத்திருக்க பாவியுங்கள் பல்முலீவ்" ............ அடிப்படையில் மனிதருக்கு உடலைச் சுத்தமாக வைத்திருக்க சவற்காரம் தேவை (அல்லது அவசியமான பொருளுமல்ல) ஆனால் விளம்பர மூலம் உற்பத்தியாளர் உடலை "மென்மை"யாக, பழபழப்பாக வைத்திருக்க வேண்டிய "தேவை"யை மக்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றனர். "தேவை" உணர்வானது மக்கள் மத்தியில் சிந்தனை மயமாக்கப்பகடுகிறது.

நாம் மேற்கூறியபடி புலம்பெயர்ந்த எம் சமூகம் நுகர்வுப் பொருள் கலாச்சாரத்தினுள் சிக்கியுள்து. தமிழ்சமூக நுகர்பொருள் கலாச்சாரமானது அரைநிலப்பிரபுத்துவ கலாச்சாரத் தன்மையுடன் கூடியது. புலம்பெயர்ந்த சமூகத்தில் இன்று தங்கநகை சேர்ப்பது, ஆடம்பரமாக பெண்கள் "பருவம்" அடையும் விழா, பிறந்தநாள், திருமணம், ............ போண்ற விழாக் கொண்டாடப்படுவது போன்றே ஆடம்பர, அத்திய அவசியமற்ற நிகழ்வுகள் "தேவை"களாக உணரப்படுகின்றது. பிள்ளைக்கு முதலாவது பிறந்தநாள் கொண்டாடுவதென்பது மிகமிக அத்திய அவசியமான நிகழ்வாக இன்று புலம்பெயர்ந்த நம் மக்களிடையே கருதப்படுகின்றது. இவ்விழாக்களுக்கு பல ஆயிரங்கள் செலவிடப்பட்டு கொண்டாடப்படுகிறது. (இதில் வேடிக்கை என்னவெனில் பிள்ளையின் தாய் தந்தை தம் பிறந்தநாளை ஒரு தடவையேனும் தேசத்தில் கொண்டாடியதில்லை. இதில் மேற்தட்டு வர்க்கம் நீங்கலாகும்.)

மற்றுமோர் உதாரணம் திருமணத்தில் தாலிகட்டுவதானால் குறைந்தது 15 தங்கப்பவுனாவுதல் இருக்க வேண்டுமென்னும் சிந்தனையாகும். மெதத்தத்தில் வர்க்கநிலைச் சிந்தனையும் குடியேறிய சமூகத்தில் உள்ள நுகர்பொருள் கலாச்சாரமும் எம்மைப் பீடித்துள்ளது.

ஏன்ன புலம்பெயர்ந்த கலைஇலக்கிய, அரசியல்வாதிகள் மீது விமர்சனம் செய்யப் புறப்பட்டு வாசகர்களாகிய உங்கள் மீது தாக்குதல்–விமர்சனம் செய்கிறோம் என யோசிக்கின்றீர்களா? மேற்கூறிய விமர்சனமானது எந்தவகை புலம்பெயர்ந்த சமூகத்தில் இவ்வரசியல் வாதிகளும், சுயகலை விளம்பரவாதிகளும் (அதாவது புலம்பெயர்ந்த) பிழைப்பு நடத்துகிறார்கள் என மேலோட்ட வரையறையை குறிப்பிடவேயாகும். நான் மேற்குறிப்பிட்டபடி புலம்பெயர்ந்த நாட்டிலுள்ள நுகர்வுப்பொருள் கலாச்சாரத் தன்மைக்குட்பட்ட தமிழ் சமூகத்தில் தான் புலம்பெயர்ந்த கலைஇலக்கிய வாதிகளும் சீவிக்கின்றனர். அதாவது இவர்கள் இந்த நுகர்வுப்பொருள் கலாச்சாரத் தன்மைக்கோ அல்லது அரைநிலப்பிரபுத்துவத் தன்மைக்கோ அப்பாற்பட்டவர்கள் அல்ல. ஆனால் தம்மை மக்களிலிருந்து வேறுபட்டவர்களாகக் காட்டிக்கொள்ள மேற்கூறிய அரைநிலப்பிரபுத்துவ கலாச்சாரத்தில் இருந்து விடுபட்டவர்களாகக் காட்டிக் கொள்ளும் கட்டுரை, கதை, நாடகம் போன்ற இலக்கியங்களை படைக்கும் இப்படைப்பாளர்கள்.


இலக்கியங்களின் தன்மை அடிப்படை

இந்த புலம் பெயர்ந்த இலக்கியவாதிகளின் இலக்கியத்தில் மேலோங்கி நிற்கும் தன்மைகளை கீழ்கர்டவாறு வகைப்படுத்தலாம்.

1) இறந்தகாலத்தை நினைத்து கவலைப்படுதல். அல்லது அவர் பெருமையைப் பிதற்றல் அதாவது கவிதைகளில். உதாரணமாக

...... என்தோசம் எங்கே......

அதை யார் கொள்ளையடித்தார்கள்..........!
சூரியக் குஞ்சுகளுக்கு பதில் சொல்லுங்கள்........!
என்றோ அல்லது
விமானம் குண்டு மழை பொழிய நானும் நீயும்........
யாழ் யூனிவசிற்றிக் கட்டிடத்தில் கட்டிப்பிடித்துப் பரண்டதை நினைக்கின்றேன்
கண்ணே........



இன்று நான் தனி ஒட்டகமாக ஒஸ்லோ றோட்டுக்களில்..............
என்றும்
சுத்தனமாய் (17 மே நோர்வே தேசியதினம்) நடக்கிறது...!
என்மனமே குதிகளிக்கிறது
எனது தேசத்தில் இது நடக்குமென்று........
நடக்கவில்லை
கனவுடன் நான் விரட்டப்பட்டேன்
இப்படி பல நூறு கவிதைகளையும்

www.padippakam.com



# ாளிகளும் அரசியலும்

கார்த்திகேயன்

நாடகங்களையும் இவர்களின் பழைய நினைவுக்கு உதாரணம் கூறலாம்.
ஏதாவது ஓர் இயக்கத்தில் சுகமாக 555 (றிபிள்பைவ்) சிகரட் வாயிலும், டெனிமும் சேட்டும், சண் கிளாசுடனும், கொண்டா 200 மோட்டார் சைக்கிளில் யாழ்பாணத்தில் இருந்துவிட்டு வெளிநாடு வந்து "என் தேசத்தைப் பறித்துவிட்டார்கள் துரோகிகள்"



ன்றால் என்ன நியாயம். அல்லது ட்பட்டு கொலைக்கும், பெண்கள் தான பலாத்காரங்களுக்கும் ணைபோய் விட்டு யாழ் னிவசிட்டியில் தான் பலாத்காரப் )த்திய பெண்ணின் உறவை தலாக வர்ணிப்பதில் என்ன ாயம் உண்டு?
ல்லது மற்ற இயக்கங்களை கள் அடித்து விரட்டுகையில் ிகளுக்கு காசு சேர்த்துக் ாடுத்தும் அதை நியாயப் படுத்திவிட்டு பின் வேளிநாட்டில் இயங்கும் புலி உறுப்பினர் சிலருடன் நடந்த முரண்பாட்டியால் புலியில் இருந்து வெளியேறி நான் விரட்டப்பட்டேன் என கவிதை எழுதுவதில் என்ன நியாயம் உண்டு.

2) இரண்டாவது தன்மை என்னவெனில் தம்மை பெண் விடுதலைப் போராளிகளாகவும் பெண் விடுதலைக்கு சார்பாணவர்களாகவும் காட்டுதல். இதில் பெண் கவிஞ்ஞர்கள், ஆண் கவிஞ்ஞர்கள் என இருபலாரும் அடங்குவர். பெண் கவிஞ்ஞர்களைப் பொறுத்தவரையில் இவர்கள் தாம் தற்போதுள்ள ஆணாதிக்க சமூகத்தில் இருந்து வெளிப்பட்டவர்கள் என தம்மைக் காட்டிக் கொண்டு அதனடிப்படையில் மக்களுக்கு உபதேசம் பண்ண புறம்படும் இவர்கள் உண்மையில் ஆணாதிக்க சமூகத்தின் பெண்கள் மீதான அடக்கு முறையை பாதுகாக்கப் புறப்படும் ஒருவித புல்லுரிவிகள். இவர்களின் பெண்விடுதலைக்கான ஒப்பாரியும், கூக்குரலும் மக்களைச் சென்றடைவதில்லை.

சில வருடங்களுக்கு முன் ஐரோப்பிய புலம்பெயர்ந்த தமிழ் ஆண் எழுத்தாளர் ஒருவர் தனது பெண்விடுதலை பற்றிய சிறுகதையில் "பெண் ஒருத்தி பிரசவ வேதனையில் துடிப்பதை அகநிலையில் இருந்து (உதாரணம் நான் வைத்திய சாலையில் மறக்கப்பட்டோன்....... எனக்கு வலி தாங்கமுடியவில்லை........) வர்ணிக்கிறார். இவர் ஓர் ஆண் இவருக்கு எப்படி பெண்ணின் அகநிலை உணர்வை வர்ணிக்க முடியும். போலி உணர்வுகளை பெண்நிலைவாதம் என்ற போர்வையில் எழுத்து மூலம் விபச்சாரம் செய்கின்றார் இந்த எழுத்தாளர்.

மேலும் இவ் ஆண் எழுத்தாளர்களைப் பொருத்தவரையில் பெண்கள் பாலியல் உடலுறவில் மட்டும் விடுதலை பெற்றால் போதும். இதற்கு பல கவிதைகளையும், கதைகளையும் உதாரணமாகக் காட்டலாம். நோர்வேயில் வாழும் பிரபல கவிஞ்ஞர் ஒருவர் சில வருடங்களுக்கு முன் ஒரு கவிதைத் தொகுப்பை வெளியிட்டார் அத்தொகுப்பில் யாழ்பாணத்தில் செல்லடித்தாக்குதல் நடந்தபோது தானும் தனது "தோழி"யும் திருமணம் செய்யாமல் உடலுறவு கொண்டதை வர்ணிக்கின்றார். இதே கவிஞ்ஞர் பெண்ணிலைவாதம் கதைத்த பெண்களை படுக்கை அறைக்கு அளைத்து அடியும் வேண்டியுள்ளார். இவ்வகையான கவிஞ்ஞர்கள் நோர்வேயிலும் ஐரோப்பாவிலும் உள்ளனர்.

மேலும் சிலர் தம்மையும் தம் எழுத்தையும் பெண்களின் குரலாகவும், கவற்சியாகவும் காட்டிக் கொள்ள பெண்களின் பெயரைத் தம் புனைபெயராகக் கொண்டுள்ளனர் (உதாரணமாக நந்தினி, மோகினி, தமயந்தி, உமையாள் ..........). இந்தியாவில் மூண்றாம் தர எழுத்தாளன் சுஜத்தாவிலும் கீழான ஜென்மங்கள் இவர்கள். சுஜாத்தா தன்னை சமூக சேவையாளனாகவோ அல்லது முற்போக்கு முந்திரிக் கொட்டையாகவோ தன்னைக் காட்டிக் கொள்ளவில்லை. தன்னை விபச்சாரியாகவே காட்டிக் கொள்கிறான். இவர்கள் எரிந்த வீட்டில் பிடிங்கிய லாபம். சமூகத்தின் சிதைவால் தம்மை நிலைநிறுத்த முனைபவர்கள் பெண்விடுதலையின் பெயரால் பெண் விடுதலைக்கு குழிதோண்டிப் புதைப்பவர்கள்.


3)மூன்றாவது தன்மையாக இவர்களின் கலைஇலக்கியத்தில் காணப்படுவது "தம்மை" மார்க்ஸீச வாதிகளாகவும், உழைக்கும் மக்களின் பிரதிநிதிகளாக, மக்கள் இலக்கியம் படைப்பவர்களாக காட்டிக் கொள்வதாகும்.

மார்க்சியம் என்பதை திரித்து, வறுத்து, பொரிகடலையாக்கி தமது நலனுக்கு எவ்வகையில் பயன்படுமோ அவ்வகையிலேயே இப்பெரிச்சாலிகள் மார்க்ஸியத்தைப் பாவிக்கிறனர். இன்னேரு புறத்தில் மார்க்ஸியத்தை திரிப்பதற்கு மார்க்ஸிசம் தெரிந்திருக்க வேண்டும். இவர்கள் பலர் பல மார்க்ஸியம் கதைத்த இயக்கங்களில் இருந்ததால் மார்க்ஸிய வசனங்களையும், மார்க்ஸிய வார்த்தைப் பிரயோகங்களையும் சில மார்க்ஸிச கலைச் சொற்களையும் கற்றனர். இவர்களின் மார்க்ஸிய அறிவு இவ்வளவுதான். அப்போ திரிப்பது என நாம் மேற்கூறியது எந்தவகையில் நியாயம் என கேட்கின்றீர்களா? இவர்களைப் பொறுத்தளவில் இவர்களின் கேள்விஞான மார்க்சியமும் சில சொற்களுமே மார்க்ஸியமாகும். இதனடிப்படையில் சில சொற்களை வைத்தே வியாபாரம் பண்ணுகின்றனர் இவ் முற்போக்குப் போலிகள். இதையே மார்க்சியத் திரிபு எனக் கூறுகிறேன் (உண்மையான மார்க்சியத் திரிபுகள் எம்மை மன்னிக்கட்டும்). மேலும் கலைஇலக்கியக் கொலைஞ்ஞர்களைப் பொறுத்த மட்டில் மார்க்ஸ் மட்டும் தான் மாக்சிஸ்ட். (பல ஐரோப்பிய திரிபுகள் கூறுவது போல) லெனின், ஸ்ராலின், மாவோ இவர்களெல்லாம் மார்க்சிஸ்டுக்களோ அல்லது புரட்சியாளர்களோ அல்ல.

கடந்தவருடம் ஐரோப்பாவாழ் முற்போக்கொன்று சரிநிகரில் ஒரு கட்டுரையில் ஸ்ராலினையும், மாவோவையும் கொலைகாறர்கள் என வர்ணித்திருந்தார். மற்றோரு பிரபல கவிஞ்ஞர் ஐரோப்பாவிற்கும் இலங்கைக்கும் அடிக்கடி பிரயாணம் பண்ணுபவர் பிரான்ஸில் இருந்து வெளியிடப்பட்ட நினைவு மலரில் கம்பூச்சிய விடுதலை இயக்கத் தலைவர் பொல்போட்டையும், ஸ்ராலினையும் திட்டித் தீர்த்திருந்ததுடன் இவர்களை புலிகளுடன் ஒப்பிட்டிருந்தார்.

உலகம் முழுவதுமமு ஸ்ராலினை பாசிச எதிர்ப்பாளராக ஏற்றுக் கொண்டுள்ளது. ஸ்ராலின் இரண்டாம் உலக யுத்தத்தில் செம்படை நடத்தி பாசிச, நாசிஸ்டுக்களை ஓடஓட விரட்டியார். மாவோ தேசபக்த யுத்தத்தில் மக்கள் நலனின் அடிப்படையில் ஏகாதிபத்தியத்தையே அடித்து விரட்டியார். இம்மாமனிதர்களை பாசிசத் தன்மை கொண்ட புலிகளுடன் ஒப்பிடுவதில் என்ன நியாயமுண்டு. மற்றொரு கேலிக்குரிய விடையம் என்னவெனில் மேற்கூறியவர் (சரிநிகரில் கட்டுரை எழுதியவர்) தம்மை புலி எதிர்ப்பாளராக வெளிப்படையாக காட்டிக் கொண்டு, மறைமுகமாக புனைபெயரில் புலிகளின் பத்திரிகையில் சமூக ஆய்வுக்கட்டுரையும் தலைவர் புகழ் கவிதையும் பாடுகின்றார். தம் வயிறு நிறைப்பதற்கும், தம்மை பிரபலங்களாக்கவும் உலக விமோசனத் தத்துவத்தையும் வளிகாட்டித் தலைவர்களையும் தூற்றுகின்றனர் இப்போலிக் கவிராயர்கள்.

(இக்கட்டுரை அடுத்த இதழிலும் தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com



# விடிந்து வந்

அம்மாவின் எரிச்சலான பேச்சைக்கேட்டுவிட்டு, பாயைவிட்டெழுந்துஅடுப்படிக்கு தேனீர் போடுவதற்காக சென்ற மஞ்சு, அடுப்பில் தேனீருக்கான நீரைவைத்து அடுப்பை பற்றவைத்துவிட்டு திரும்பவும் பாயில் வந்து சரிந்தவளை சற்று முன் அம்மா சொன்ன அந்த வசனம் அழுத்திக் கொண்டிருந்தது.

அவளது அம்மா இதற்கு முன் எவ்வளவோ அவளைப் பேசியிருந்தாலும் சற்று முன் சொன்ன வசனம் ..............

''உன்னால மானக் கேடாயிருக்கு............ உன்னால மானக்கேடாயிருக்கு"

திரும்பத் திரும்ப அவள்மனம் அதையே அசைபோட்டது. அத்துடன் அவ்வசனத்தின் ஒவ்வொரு சொல்லிலும் தனக்குச் சமுதாயத்தால் அளிக்கப்படுவதற்குக் காரணமாயிருந்த அந்தப் பழைய நினைவுகளையும் ஒருகணம் நினைவுபடுத்தியது.

ஆம்!...... அவள் செய்ததுதான் என்ன?.........

காதல் கொண்டாள் புரட்சியின்பால் .......

ஈழத் தேசவிடுதலையின் பால் பற்றுவைத்தாள். தன் வர்க்கச் சிறையுடையும் எனக் கனவுகண்டாள்.

அன்று ஊரில் ஒரே கலகலப்பு ஊரின் அத்தனை பத்திரிகைகளிலும் அது சுடச்சுட வெளிவந்திருந்தது.

''எடி புள்ள!.... ஒரு கதை தெரியுமே?— நம்ம சண்முகத்தோட மகள் ஓடிற்றாளாம்"

"என்னக்கா செல்லுறாய்? —— ஏந்தப் பெட்டை?........ நடுவிலுப் பெட்டையா அல்லது கடைசிப் பெட்டையா?"

"நடுவிலுப் பெட்டை மஞ்சு தான் ஓடிற்றாளாம். ஆரோடை தெரியுமே? உன்ர மச்சான் விமலனோடதான்"

"என்ன விமலனோடையே?"

"ஓமடி புள்ள ...... ராத்திரித்தான் நடந்ததாய்க் கதைக்கினம்.........சின்னராசுவேட பொடி ராத்திரி செங்கோல் அண்ணா வீட்டில ரீவி பார்த்திட்டு வரக்க இவள் மஞ்சு கோயிலடியில மோட்டைச்சைக்கிலில ஏறிப்போனதைப் பார்த்தானாம் ....அதோட ராசம்மாவும் மகள காணேல்லையெண்டு காலம்பற தேடினவள்"

''ஓம்......... ஓம்...... ஏன் தேடமாட்டாளவையள்?— இரவேடு இரவாய் ஓடவிட்டுட்டு தேடுறமாதிரி நடிக்கிறாளவையள்—— பொறு இன்டைக்கு தம்பிமிட்டச் செல்லி அவளவைய ஒருகை பாக்கிறன்"

இவ்வாறு ஊரில் உள்ளவர்கள் அனைவரும் ஊதிஊதி அது சண்டையாக உருவெடுத்தது. இப்படியான நிகழ்வுகள் அவ்வூரில் அடிக்கடி நிகழ்வது இயற்கையே. காரணம் அவ்வூரில் வாழும் அனைவரும் சாதி, சமய ரீதியாகவும் உறவு ரீதியாகவும் இணைக்கப்பட்டிருப்பது தான்.

அப்போது பிரச்சனைக்குக் ஒருவகையில் காரணமாயிருந்த மோட்டார் சைக்கிள்கள் வரும் ஒலி அனைவரையும் ஒருகணம் நிசப்தப்படுத்தியது. இரு மோட்டார் சைக்கிள்களில் நான்கு இளைஞர்கள் அமர்ந்திருந்தனர். இவர்கள் அனைவருமே டெனிம் முழுக்காற்சட்டையும் பெரிய செட்டுக்களை அணிந்து கைகளை மேலே மடித்து விட்டிருந்தனர். அவர்களில் இருவர் கூட்டத்தை நோக்கிவர மற்றவர்கள் சிறிது விலகி எதிர்திசையில் கூட்டத்தை நோக்கியவண்ணம் நின்று கொண்டிருந்தனர். கூட்டத்தை நோக்கிவந்த இருவரில் ஒருவன் விமலன். இவர்கள் வருவதைக் கண்ட சிலர் ''நமக்கேன் தேவையில்லாத பிரச்சனை" என்று நழுவினர்.

விமலுடன் வந்த மற்றவன் கூட்டத்தை அமைதியாக இருக்கும் படி கூறிவிட்டு, வழமைபோல தங்களை அறிமுகப்படுத்திவிட்டு பேசத்தொடங்கினான்.

''இன்று ஈழத்தில் எமது முன்னணியானது மார்க்சிச, லெனினிசக் கருத்துகளூடாக மக்களை அணிதிரட்டி அவர்களைப் புரட்சிப் பாதையூடு நடத்திச் செல்லும் திட்டத்துடன் செயற்படுகின்றது. எமது விடுதலைப் பாதையானது தேசவிடுதலை, வர்க்க விடுதலை போன்ற பாதைகளூடாகச் சென்று ஒரு சோசலிச சமுதாயத்தை உருவாக்கும் நோக்கம் கொண்டது. இன்று இக்கிராமத்தில் இருந்து எமது முன்னணியில் ஒரு தோழர் இணைந்துள்ளார். இதனால் இங்கு ஏற்பட்ட குழப்பங்களுக்காக வருந்துகிறோம். நாம் நமது முன்னணியில் தோழர்களை வென்றெடுக்கும் போது அவர்களை எமது கொள்கை ரீதியாக வளர்த்தபின்பே அவர்களை எம்முடன் இணைத்துக் கொள்வோம். ஆனால் சில சந்தர்ப்பங்களில் அவ்வாறு செய்ய முடியாத நிலையில் உள்ளோம். காரணம் எமது சமூக அமைப்பு. எமது சமூக அமைப்பானது கலாச்சாரங்களால் முற்று முழுதாக ஆக்கிரமிக்கப்பட்ட ஒன்றாகவும், ஆணினத்தின் ஆளுமையால் ஆழப்பட்டுவரும் பிற்போக்குத் தன்மை கொண்டதாகவும் இருந்து வருகிறது. எமது சமுதாயத்தில் எத்தனை வீதமான பெண்களால் சுதந்திரமாகவும் சுயவிருப்புடனும் செயற்பட முடிகிறது? தடைகளையும் மீறி சுயமாகவும், சுதந்திரமாகவும் செயற்பட்டவர்கட்கு, செயற்படுவோர்க்கு இச்சமுதாயம் தரும் மதிப்பென்ன? ஒருகணம் சிந்தியுங்கள். ஆம் இன்று எமது சமுதாயத்தில் சிறையுடைத்த இந்தப் பறவைகளுக்கு நாம் வளங்கிய பட்டங்களே அவர்களுக்கு எம் சமூகம் தரும் மதிப்பையும் மரியாதையையும் எந்த அளவில் உள்ளதென அளக்கும் அளவு கோலாய் உள்ளது. இப்படியான சமூக அமைப்பில் ஒரு பெண் வீட்டைவிட்டு வெளியேறி செயற்பட யார்தான் அனுமதிப்பார்கள்? (முனைவது எவ்வளவு கடினமான விடையம்) இப்படியான சந்தர்ப்பங்களில் தான் நாங்கள் ரகசியமான முறையில் வீட்டாருக்குத் தெரியாமல் எம்முடன் இனைத்துக் கொள்கின்றொம்." இவ்வாறு தன்பேச்சை முடித்துக் கொண்டு அங்கிருந்து கிளம்பினார்.

அவர்கள் மோட்டர் சைக்கிள் ஓடிச்சென்ற பாதை மண்ணால் அமைக்கப்பட்டிருந்ததால் ஒரே புழுதிமண்டலமாக இருந்தது.

பெண்கள் பாசறை வழமை போல இயங்கிக் கொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிள் இரைச்சல் எல்லோர் கவனத்தையும் ஈர்த்தது. ஆனால் மஞ்சு மட்டும் எதையோ பறிகொடுத்தவள் போல கோலில் ஒரு முலையில் போடப்பட்டிருந்த கதிரை மீது அமர்ந்திருந்தாள்.மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் அவற்றை மர நிழலில் விட்டுவிட்டு உள்ளே நுழைந்தனர். அவர்களுடன் விமலும் வந்திருந்தான். வந்தவன் மஞ்சுவைக் கண்டதும் அவளருகில் சென்றான். ஏதோ சிந்தனையில் இருந்த அவளுக்கு அவன் வருகைவிழிப்பேற்றியது. அவள் மனச்சுமைகள் விழியோரம் பனிபோல் கரைந்தோட விமலனை நோக்கி "ஊர்ப்பக்கம் போனீங்களா? என்னைப்பற்றி....... என்ன......." என விக்கலுடன் வினாவ முற்பட்டவளை இடைமறித்த விமலன், ''மஞ்சு, எனக்கு விளங்குது நீ என்ன கோட்கப் போறாயெண்டு? ........ என்ன செய்வது உனக்குத் தெரிந்தது தானே எங்கட ஊர் எப்படியெண்டு? .......... ஏற்கனவே நம்மைப் பற்றி கதையடிபடுது............நீர் தோழர்களோடு இரவு வந்ததாக தோழர் ஜேயசீலன் மூலம் அறிஞ்சன். எனக்குத் தெரியும் ஊரில ஏதேனும் நடக்குமெண்டுஅதனாலதான் தொகுதி வேலைகளையும் விட்டு ஊர்பக்கம் போனனான்....... நினச்சமாதிரி நடந்தது." இவ்வாறு நடந்தவையையும் மஞ்சுவின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் பேசிக்கொண்டிருக்கும் போதுபெண்கள் முகாம் பொறுப்பாளரது வரவும் பொருத்தமாயிருந்தது.

இப்போது விமலன் கரவேட்டிப் பகுதியில் அமைப்பின் சார்பில் நியாயவிலைக் கடையொன்றை நடாத்திக் கொண்டிருந்தான். மஞ்சுவும் அப்பகுதியில் பெண்களமைப்பாளருடன் "பெண்கள் விடுதலை முன்னணி" அமைப்பு வேலையில் ஈடுபட்டிருந்தாள்.

அன்று மஞ்சு முகாமில் சமைக்கும் முறையாதலால் அமைப்பு வேலைக்குச் செல்லவில்லை. அன்று தேவையான சாப்பாடுகளை சமைத்து வைத்துவிட்டு அடுத்தநாள் பெண்கள் பாசறைக்கான விரிவுரைகளை ஆயத்தப்படுத்த சில புத்தகங்களைப் புரட்டியவண்ணம் இருந்தவள் அப்படியே அசந்து தூங்கிவிட்டாள். அமைப்பு வேலைக்காகச் சென்ற அனைவரும் வேலையை முடித்து விட்டு அமைப்பு வாகனத்தில் வந்திறங்கினர். வாகனத்தை விமலின் நண்பனான குணா ஓட்டிவந்தான். இவர்களது வரவால் ஏற்பட்ட சத்தத்தால் விழித்தெழுந்தாள் மஞ்சு. அவளை நெருங்கிய குணாவை நோக்கி "என்ன குணா கனநாள் கண்டு—" என்றவாறு பேச்சை ஆரம்பித்தாள்.

"உங்களிட்டைத்தான் வந்தனான்..... மற்றது தோழர் விமலுக்கு இரவு ரத்தினங் கடையில் காலில கண்ணாடி வெட்டிப்போட்டுது—— கடை றுமிலதான் படுத்திருக்கிறார்." என்றான் குணா.

அசதியில் இருந்தவளை ஒரு கணம் அசத்தியது. கதிரையை விட்டு எழுந்தவள் முகாம் பொறுப்பாளர் சாந்தியிடம் செல்லிவிட்டு வருவதாகவம் அதுவரை தனக்காக காத்திருக்கும் படியும் குணாவிடம் கூறிவிட்டு காலை ஒரு அடியெடுத்து முன்வைத்தாள். அப்போது அவள் காலில் ஒரு நெருடல் நெருடுவதை உணர்ந்தாள்.

வாகனம் சென்று கொண்டிருந்தது.......... அவர்கள் மத்தியில் மட்டும் நிசப்தம் நிலவியது.

கதவு தட்டப்படும் சத்தம் கேட்ட விமல் எழுந்து நிற்க முற்பட்டான். அதற்கிடையில் குணாவும் மஞ்சுவும் உள்ளே நுழைந்து விட்டனர். உள்ளே நுழைந்த குணா அடுப்பில் தேனீருக்காக நீரை வைத்துவிட்டு அவர்களிடம் ஏதோ செல்லத்திரும்பினான் ஆனால் அவர்களஇ அதைக் கேட்கும் நிலையிலில்லை.

கண்ணாடியால் காயம்பட்ட அவனது வலி கலைந்துகொண்டிருந்தது. உடலில் அசதி, உணர்வின் ஒளிபட்டு ஓடி ஒழிந்து கொண்டது. அணைபோட்டுத் தடுத்திருந்த அன்பெனும் ஜீவநதிஅணையுடைத்துப் பாய....... ஒளிகொடுத்ததுக்களைத்து சூரியன் வெம்மை தணிக்க கடலணை[illegible] சென்றுகொண்டிருந்தான்.

கனவுகளின் ஜனனங்கள் .......... மறைவுகளுக்கு அஞ்சலிகள்......... சாம்பல் பூத்த மேடுகளில் சபதங்கள்........., துமிமுளைச் காளான்கள் போல் வரலாறு கூற[illegible] புறப்பட்ட உரத்த இரவுகளின் ஈடுஇணையற்ற தாக்கங்களுடன் புரட்சிப்பணி ஏதோ வழியில் சென்றுகொண்டிருந்தது. அன்று வழமைபோல அமைப்பு வேலை முடித்து முகாம் திரும்பிய மஞ்சு கிணற்றடிக்குச் சென்று முகங்கழுவிவிட்டு சமய[illegible] கட்டினுள் நுழைந்தாள். அங்கே முகாம் பொறுப்பாளர் சாந்தியு[illegible] மற்றும் சிலரும் சமையலில் ஈடுபட்டிருந்தனர்:

படிப்பகம்

www.padippakam.com



# பொழுது

'என்ன மஞ்சு களைச்சுப் போய் வாறீர் போல இருக்கு' என்ற வாறு மஞ்சுவுடன் பேச்சை ஆரம்பித்தாள் சாந்தி."

அப்பிடி இல்லை! 'வேலை முடிஞ்சு வரும்போது சைக்கிள் காத்துப் போயிட்டுதுஅதால உருட்டிக்கொண்டு வந்தனான்"

என்ன உம்மோட றோகினி வந்தாவேல்லே......... சைக்கிள அங்கையேன் தெரிஞ்ச வீட்டில விட்டுப்போட்டு றோகினியின்ற சயிக்கிலில வந்திருக்கலாம் தானே?" என்று வினாவினாள் சாந்தி. "ஓவ் செல்ல மறந்திட்டன் இண்டைக்கு ரோகினியின்ற ஊர்ப்பக்கம் போயிருந்தம். றோகினியோட அம்மாகண்டுவிட்டு வீட்டுக்கு கூப்பிட்டா....... அந்த அம்மா ஒரே அழுகை......... ஏதோ றோகினிக்கு ஜேர்மனில் பொடியன் பாத்திருக்கினமாம்..... அதால அவளையும் அங்க அனுப்ப முயற்றி செய்யினமாம்....... ஆனா றோகினிக்கு விருப்பமில்லை. அந்த அம்மா அழுதழுது சொன்னா, றோகினியை அனுப்பினா அங்களுக்கு நிம்மதியாம். பாரம் குறைஞ்சிருமாம் இதற்கு மேலேயும் எனக்கு அங்க நிற்க முடியேல... மற்றது றோகினி ரண்டு நாள் வீட்டில நிண்டிட்டு வாறதாம் என்டாள்" என்று தொடர்ந்த மஞ்சுவை இடைமறித்தவண்ணம் சாப்பிடவருமாறு ஒருத்தி அழைக்கவே எல்லோரும் சாப்பிடுவதற்கு ஆயத்தமாயினர்.

1986ஆம் ஆண்டு விடுதலையின் பெயரால் புதிய இனந்தெரியாத சமாதிகள். பதவி(கதிரை)யின் பெயரால் அந்தரங்கப்பிரிவினைகள், இவற்றிடையே சிக்கித்தவித்தவண்ணம் சிறையுடையும் எனக்கத்திருந்து- இலவுகாத்த கிளிகளாய்......

மஞ்சு......! மஞ்சு.........!

பாயில் படுத்தபடி இறந்த கால நினைவுகளை அசைபோட்டுக் கொண்டிருந்தவளை ஏழுப்பினால் அவள் நண்பி கமலா.

"என்னடி அழுகிறாய் போல கிடக்கு. முகமெல்லாம் காஞ்சுபோயிருக்கு. எனக்குத் தெரியுமடி நீ பழசையெல்லாம் நினச்செண்டு இருக்கிறாயெண்டு. எடியே!........ அதையே நினைச்சண்டு இருந்தா என்ன வரப்போகுது?......... பணத்தையும் அந்தஸ்தையும் அளவுகோலாக் கொண்டு வாழ்வையும் மனிதரையும் எடைபோடுர இந்த சமுதாயத்தில அவன் மட்டுமென்ன விதிவிலக்காடி?........"

என்று வந்தவுடனேயே தனது பிரசங்கத்தை தொடர்ந்த கமலாவை இடைமறித்த மஞ்சு, "அதில்லையடி, வீட்டைவிட்டு வெளியே போகேல்லாம இருக்கு........ எல்லோரும் என்னை ஒருமாதிரியாய் பாக்கினம்........... எனக்கு உயிர் போறமாதிரி இருக்கு.......... ஏன் அதுமட்டுமா வீட்டில கூட நின்மதியில்லையடி.......... அம்மா ஒரே சத்தம் போட்டண்டு இருக்கு.........."

"எடியே எனக்கெண்டா விளங்கயில்லையடி! நீ என்ன புதுசாய் கிளிச்சிட்டாய்?........ இயக்கத்துக்குப் போனாய், அதுதான் எல்லோருக்கும் தெரியுமே, புரட்சியெண்டு கதைச்சுக் கொண்டு எல்லாத்தையும் அடகுவைச்சுக் கொண்டு திரிமிறாங்களெண்டு......... வேறையென்னடி லவ் பண்ணினாய்......... அவனவன் ஊரைவிட்டு, நாட்டைவிட்டு ஓட என்னென்னவோ பண்ணுறாங்கள்....... விமலனென்ன அதுக்கு விதிவிலக்கா? கனடாவுக்கு அனுப்புறாங்களெண்டவுடனை எடுபட்டுப் போயிற்றான். அதுக்கு நீ என்னடி செய்யிறது? மற்றது என்னடி உங்கட அம்மாவோட ராசமணி ஏதோ பேசினாவாம், உன்ன ஓடுகாலி ஆட்டக்காறி எண்டெல்லாம் பேசினாவாம்......... அவமட்டுமென்ன சிவத்தோட ஓடப்........" என்ற தொடர்ந்த கமலாவை தடுத்த மஞ்சு

"கமலா, அவ அப்படி விளங்காத தன்மையில பேசிட்டா எண்டதுக்காக நீயும் அதே தவறைச் செய்ய முனைகிறாய் ........ உண்மையில் எங்கட சமுதாயத்தில் எங்கட இந்த நிலமைக்கு நாங்களும் காரணமாய் இருந்து கொண்டுதானடி இருக்கிறம். ஏனண்டா நாங்கள் இந்த சமுதாயத்தால அப்படிப் பழக்கப்பட்டு விட்டம். எங்கட கலைகலாச்சாரங்களும், இலக்கியங்களும் சீதை கேடு தாண்டிய கதைகளைக் கூறி எச்சரிக்கை உணர்வையும், படிதாண்டாப் பத்தினி என்று பட்டங்கொடுத்து, கணவனைக் கூடையில வைத்து தூக்கவும் கற்றுத் தந்தனவேயொழிய வேறொண்றும் இல்லையடி........."

"மஞ்சு என்னடி அடுப்படியில புகைக்கிது?" என்ற கமலாவின் எச்சரிக்கைக்கு "ஓ மறந்திட்டனடி...... தேத்தண்ணிக்கு தண்ணி வைச்சனான்........ வாடி அடுப்படிக்கு" என்றவாறு மஞ்சு பாயைவிட்டெழுந்து ஆடுப்படியை நோக்கி அடிவைத்தாள்.

இக்கதையானது ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட போதும் இச்சிறுகதை கதாசிரியரின் முழு அனுமதியுடனும் காலத்தின் தேவைகருதி பிரசுரிக்கின்றோம்.

# மனிதவாழ்வும் சமூக உருவாக்கமும

*மூகவிஞ்ஞானத்தில் மார்க்ஸ், ஏங்கல்சின் ஆய்வுகளும் விளக்கங்களுமே மனிதனின் உன்மை லையை உலகிற்கு அறிவித்ததுடன் எமக்கு மல் சக்தி ஒன்றுண்டு என்பதைத் பொய்யான ருத்து என நிரூபித்து, உலகிற்கு இயங்கியல் த்துவத்தை முன்மொழிந்தனர்.*

னிதவாழ்வு என்றும் லகுவானதாய் இருந்ததில்லை. றாக கல்லு முள்ளு நிறைந்த கடினமான தையைப்போன்றே இருந்து ந்துள்ளது. தமது நலனைப் துகாக்கவும் பொருட்களை பகரித்து தனதும், ர்னைச்சுற்றியுள்ளவர்களின் பிற்ரையும் வளர்ப்பதற்காக ார்களும், தமது அரசியல் னைப் பாதுகாப்பதற்காக லட்சம் பேரைக் கொண்று பித்து இரத்த ஆறை ஓடவிடும் தங்களும், மக்களின் பெரும்பாண்மையினர் வறுமையால் வாடுகின்றனர் என்பதைகண்டறிந்ததால் அதைமாற்றி அமைக்க புரட்சிகளும் அதனடிப்படையிலான அரசியலமைப்பு மாற்றங்களும், பசிக்காக உணவு தேடுவதை விடுத்து பதுக்கிவைத்து லாபம் சம்பாதிக்கும் நோக்கிலான பதுக்கல்களும், நெற்றிவேர்வை நிலத்தில் சிந்த உழைக்கும் தொழிலாளியிடம் எந்தவகையில் அவனது உழைப்பைச் பெறமுடியுமோ அந்தவகையில் எல்லாம் உழைப்பைப்பெற்று சிறு தொகையை மட்டும் ஊதியமாகப் பேறும் தொழிலாளர்களாகவும், இருந்த இடத்தில் இருந்தபடியே தாம் அணிந்த உடைகசங்காது பணத்தையேல்லாம் பகட்டிற்காகச்செலவிடவும், ஆனால் தொழிலாளி சம்பள உயர்வு கேட்டால் அதை மறுக்கும் முதலாளிவர்க்கமும் என பலவகையான பாகுபாடுகளைக் கொண்டு உள்ளதுதான் மனித வாழ்க்கை. இவ்வாழ்கையில் ஒடுக்கப்பட்ட மக்கள் ஒடுக்குபவர்களுக்கு எதிராகவும், சுரண்டப்படுபவர்கள் சுறன்டுபவர்களுக்கு எதிராகவும், தொழிலாளிகள் முதலாளிகளுக்கு எதிராகவும் அவ்வப்போது கிளாந்தெழுந்துள்ளனர். இதலால் மனித சமூகத்திக் வளர்ச்சியானது தமக்கு தேவையான புதியவற்றை கண்டுபிடிக்கும் சமூகமாகவளர்ச்சி அடைந்தது. தனது தேவைகருதி இயற்கையில் இருந்து எவற்றைஎல்லாம் பெற்றுக்கொள்ள முடியுமே அவற்றைஎல்லாம் பெற்றுக் கொண்டது. தனது உயிர்வாழ்விற்கு உணவு அவசியம் அதற்காக காடுகளில் வேட்டையாடத் தெடங்கிய மனிதன் தற்போது பண்ணைவளர்ப்பு முறைக்கு முன்தள்ளப்பட்டான். இதேபோல் வேட்டையாடியவற்றை பச்சையாகவே உண்டுகளித்தமனிதன் அதை சுட்டுத்தின்பதற்கு அவசியமான நெருப்பைக் கண்டுபித்தான், சுட்டுத் தின்றால் மட்டும் போதும் என அவன் அன்று விட்டிருந்தால் பானையோ அல்லது இலகுவாக தீவைக்கக் கூடிய தீப்பெட்டியையோ அவனால் கண்டு கொண்டிருக்க முடியாது. இதேபோன்று தான் மனிதனில் தேடுதலால் உலகம் முன்னேறத் தொடங்கியது. மனிதவாழ்கை கறடுமுறடாக இருந்ததால் அதை இலகுபடுத்த துடித்த மனிதன் தனக்கு தேவையானபண்டங்களை மட்டுமே இலகுபடுத்துவதில் முயற்சித்தானே அன்றி தனது சமூகத்துக்குள்ளேயே புரையோடிக்கிடக்கும் புற்றுநோயைப்போன்ற வர்க்கபேதத்தை அவனால் கண்டறிய முடிந்தாலும் அதை அகற்றுவதற்கான முயற்சிகளில் அவனது திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டவாறே உள்ளது.

உலகம் முழுவதும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் புறப்பட்ட மனிதன் முதலில் இயற்கையை வெல்லலானான். எமக்கு மேலே ஏதோ ஒரு சக்தி உண்டு என கண்மூடித்தனமாக நம்பவைத்த பலரின் முகங்களில கரியைப் பூசுவதற்காக தேடுதலில் இறங்கினான். அதன் வேற்றிதான் இன்றைய விஞ்ஞான உலகம். இவ்விஞ்ஞான உலகத்துள் நாம் பிறந்தது மே உட்பிரவேசிக்கின்றோம். ஆகாயத்தைப்பார்த்து சந்திரன்

படிப்பகம்

www.padippakam.com



**AVSENDER / FROM:**

**Sumaihal**
**postboks: 415**
**9001 TROMSØ**
**NORWAY**

# BLAD:

**MOTTAKER / TO:**

## 7 பக்கத்தொடர்

ஏன் தேய்ந்து திரும்பவும் வளர்கின்றான் என்ற கோள்விக்கு விடைதேடும் போதே நாம் வானவியலினுள் பிரவேசிக்கின்றோம், ஒரு குமிழின் மத்தியில் சிறு இழை ஒன்றின் மேல் வெளிச்சம் வருகின்றது எப்படி என அறியமுற்படும் போது பௌதீக விஞ்ஞர்னத்துள் புகுகின்றோம், சிறுவயதில் பலுனில் தனது விலாசத்தை எழுதி ஆகாயத்தில் பறக்கவிடுவதற்காக சிறு வாய்கொண்ட போத்தலினுள் சாதாரணமாகக் கிடைக்கக் கூடிய பொட்களை வைத்து ஐதரசன் என்ற வாயுவை உருவாக்குவதன் மூலம் ஆகாயத்தில் அந்த பலுானை பறக்கவிட முயற்சிக்கின்றான் அப்போது அவன் இரசாயன விஞ்ஞர்னத்துள் புகுகின்றோம், இதோபோன்று சிறுவயதில் வீடுகட்டி விளையாடுவதற்காக ஒருசில தண்டுதடிகளைப் பொறுக்கி அழகான சிறு குடுசை கட்டி விளையாடுவதன் மூலம் கட்டிடக்கலைவிஞ்ஞர்னத்தினுள் புகுகின்றோம் இவ்வாறு எமது செயற்பாடு அனைத்தும் ஒரு விஞ்ஞான உலகத்தயே நாடி நிற்கின்றது. இதேபோன்று நாம் நேரடியாக உணராவிடினும் மறைமுகமாகவோ அல்லது மனிதனின் வாழ்வு ஏன் இவ்வளவு கடினமானது என்ற கோள்வியைக் கேட்பதனாலோ நாம் சமூகவியல் விஞ்ஞர்னத்தினுள் புகுகின்றோம். சமூகவியலைத் தவிர்ந்த மற்ற எல்லா விஞ்ஞானங்களும் மனிதனின் அன்றாட வாழ்வுற்கு தேவையானவற்றைப்பற்றியது. ஆனால் சமூகவியலோ மனிதன் தன்னைப் பற்றி தானேஅறிந்து கொள்ளவும் அவன் இன்று எந்நிலையில் வாழ்கின்றான் என்பது பற்றி அராயவும் உதவுவதுடன் நமது மூதாதையர்களின் கலாச்சாரம் என்ன? எவ்வாறு வேலைசெய்தனர்? நாளுக்கு நாள் அவர்கள் இயற்கையுடன் நடத்திய யுத்தம் என்ன என்பதுபற்றியேல்லாம் அறிய உதவுகின்றது.

மனிதனின் வாழ்வு கடினமானதாய் இருப்பதற்கு காரணம் என்ன என்பது பற்றி ஆய்வு செய்கின்றது சமூகவிஞ்ஞானம். மனிதன் எந்த பொருளாத அடிப்படையில் சீவிக்கின்றான் என்பது பற்றியும் அது ஆராயத்தவறவில்லை. இவ்வாறு சகலவிதமான சமூக நடைமுறைகளையும் ஆராயும் இவ்விஞ்ஞர்னம் மற்றைய விஞ்ஞானங்களில் இருந்து பிரிந்துவிடவில்லை. சமூகவிஞ்ஞானத்தில் பல்லாயிரக்கணக்கான மேதைகள் இருந்தபோதும் அவர்களில் ஒருசிலரோ இன்றைய இச்சமூகம்பற்றிய சரியான அய்வைநடத்தி அதற்கு தீர்வைத்தந்ததுடன் நடைமுறையில் நடத்தியும் காட்டியவர்கள். பௌதீகத்தில் நியூட்டனில் புவியீர்பு விசைபற்றிய ஆய்வும் விளக்கமும் பௌதீக வரவாற்றில் எவ்வளவு மாறுதலைத் தந்ததோ அதேபொன்று சமூகவிஞ்ஞானத்தில் மார்க்ஸ், ஏங்கல்சின் ஆய்வுகளும் விளக்கங்களுமே மனிதனின் உன்மை நிலையை உலகிற்கு அறிவித்ததுடன் எமக்கு மேல் சக்தி ஒன்று உண்டு என்பதையும் பெய்யான கருத்து என நிரூபித்து, உலகிற்கு இயகங்கியல் தத்துவத்தை முன்மொழிந்தனர். இதை நடைமுறைப் படுத்தியவர்கள் தான் லெனினும், மாவோவும்.

இவர்களின் இவ்வடிப்படையிலேயே மதிதனது வாழ்வு பற்றி ஆய்விற்கு முற்படுகின்றேன். மனித வாழ்வானது தனிஒரு மனிதனைமட்டும் உள்ளடக்கியதில்லை மாறாக ஒருகூட்டத்தையோ அல்லது ஒலு சமூகத்தையோ உள்ளடக்கியது. ஒரு குறிப்பிட்டசமூகம் தமக்கும் மற்றைய சமூகத்திற்கும் இடையில் கானப்படும் வித்தியாசத்தை இனங்காட்டுவதன் மூலம் தாம் ஒரு குறிப்பிட் இனக்குழுவாகின்றனர். அதாவது மதம், மொழி, கலாச்சாரம், ..... .. போன்றவைகளைக் கொண்டு வேவ்வேறு குழுக்களாக இனங்காட்டுகின்றன. இருந்தபோதும் மக்கள் குறிப்பிட்ட ஒரு அரசியல் கருத்தால் மட்டுமே உலகம் முழுவதும் ஆழப்படுகின்றது. இவ்வரசியல் கருத்துக்கள் மனிதனின் ஆரம்பகாலமான ஆதிப் பொர்துவுடமை சமூகத்தில் இருந்தே ஆரம்பிக்கின்றது. மனிதன் ஆதிப்பேதுவுடமை காலத்தில் தனக்கு தேவையானவற்றை தானே இயற்கையிடம் இருந்து பெற்றுக்கொன்டான். இவனது தேவை நாளுக்கு நாள் அதிகரிக்க அவன் இயற்கையிடம் அதிகமாக நாடிசநிற்கவேண்டிய கட்டாயமும் ஏற்பட்டது. அப்போது தேவைலையை இலகுவாக்குவதற்காக முயற்றிசியில் ஈடுபட்டான். அதாவது இயற்கையிடம் இருந்து பெற்ற பொருட்களை பதப்படுத்தி தனது தேவைக்கேற்ப கொண்டுவரலானான். அப்போது ஆதிப் பொதுவுடமை சமூகஅமைப்பு மாற்றப்பட்டு அடிமை உடமை அமைப்பு உருவாகத் தெடங்கியது. இக்காலத்தில் இயற்கையிடம் இருந்து தனக்குத் தேவையானவற்றைப் பெற்ற போதிலும் அவற்றை எவ்வாறு பதப்படுத்துவது எனத் தெரியாதவர்கள் தனது வல்லமையைப் பயன்படுத்தி ஆட்சிசெய்யப் புறப்பட்டான். அப்போதுதான் மனித சமூகத்தில் ஆன்டான்இக்அடிஇமை விஞாடஇருந் வேறுபட்டதன்மையுள்ள மனிதசமூகம் உருவானது.

## 1 பக்கத்தொடர்

ஒருபுறமிருக்க புலிகளின் வெளிநாட்டுப் படையணிகள் மக்களின் இறந்த பிணங்களையும், இரத்த ஆற்றையும் திரைப்படமாகவும், வர்ண அட்டைகளில் புத்தகமாகவும் தொகுத்து தம் பிரச்சாரத்திற்கும், பணம் திரட்டுவதற்கும் பாவிக்கின்றனர்.

புலிகளுக்குத் தெரியும் இவ்வாறான வீடியோப்படங்களைக் காட்டுவதன் மூலம் தமது இயக்கத்திற்கு வெளிநாடுகளில் இருந்து பலநுறு ஆயிரம் ரூபாய் பணம் கிடைக்குமென. அதேவேளை மக்கள் எந்தஅளவு துன்பப்படுகின்றனரோ அந்த அளவிற்கு தமது இயக்கம் பலப்படும் என்று.

புலிகள் நடத்துவது மக்கள் யுத்தம் எனப்பிரச்சாரப்படுத்தப்பட்டு வருகின்றது இது உண்மை அல்ல. மாறாக இயக்கத் தலைமையின் நலனையும், அவர்களின் அடிவருடிக் கூட்டத்தின் நலனையும் பாதுகாப்பதே தற்போதைய யுத்தத்தின் நோக்கமாகும். மக்கள் யுத்தமெனின் மக்களோடு மக்களாக நின்று தண்ணீரில் மீனாக மக்களின் பார்துகாப்பை முன்நிறுத்தி, மக்கள் நலனை முன்னிறுத்தி முன்னெடுப்பதே மக்கள் யுத்தமாகும். மக்களை யுத்த முனையில் முன்தள்ளிவிட்டு பின்நின்று தாக்குவதும் ,மக்களை பாதுகாக்காது இராணுவம் வரும்போது தாம் பாதுகாப்பான இடங்களுக்கு சென்று பதுங்கிக் கொள்வதும் மக்கள் யுத்தமோ? அல்லது வீரமோ ஆகாது.

தற்போது வெளிநாட்டுப் புலிகள் பணம் சேற்பதற்காகவும், பிரச்சாரத்திற்காகவும் நவாலி ஆலையத்தாக்குதலில் மக்களின் இழப்பை வீடியோ படமாக்கி எல்லோருக்கும் விளியோகிக்கின்றனர். இப்படத்தில் கவனிக்கத் தக்கவிடையம் என்னவெனில் இராணுவ விமானம் தாக்குதல் நடத்திய ஆலையங்களுக்குப் பக்கத்தில் புலிகள் முகாம் காணப்படுவதே. யுத்தம் நடக்கும் போது ஆலையத்தைத் தாக்கியது இனவெறியிடித்த அரசின் இனவாதநடவடிக்கையே. அதேவேளை ஆலையங்களின் அருகில் முகாம் வைத்தது யார் தவறு? தமது பாதுகாப்பை முன்னிறுத்துவதே புலிகளின் நோக்கம்.

"நாடு சுடுகாடாகினாலும் ஒருவன் மட்டும் மிஞ்சினாலும் பறவாயில்லை தமிழீழம் கண்டே தீருவோம்" என கோசமிடும் புலிகள் தம்மை மட்டும் பாதுகாப்பது புதிதல்லவே. ஐரோப்பாவில் பணம் பறிக்க புதிய பிரச்சார வழியை புலிகள் கண்டுபிடித்துள்ளனர். முன்பு தமது வீரத்தையும், ஆயுதபலத்தையும் வீடியோ படமாக்கி காசுபறித்தனர். தற்போது மனித இரத்தத்தையும், சதைத் துண்டங்களையும், பிணங்களையும், கூக்குரல்களையும் படமாக்கி பணம்பறிக்கின்றனர். இதைப்பார்த புலம்பெயர்ந்த தமிழர்கள் பணத்தை அள்ளி அள்ளிக் பொடுக்கின்றனர். ஏந்தவித நியாயமும் நீதியும் கேளாமல் தாம் மட்டும் இங்கு சுகமாக சீவித்தால் காணும் என்று தன்னலமும் ஒன்று சேர, இராணுவத்தால் கொல்லப்பட்டும், மக்கள் நாட்டில் அழிவதையும் கணக்கெடுக்காமல் பணம் கொடுத்தால் தமிழ் மக்களின் பிரச்சனை தீர்ந்துவிடும் என்று தான் நாம் செயற்படுகின்றோம்.

தமிழீழம் எந்தக்காலத்திலும் கிடைக்கப்போவதில்லை. அப்படிக் கிடைத்தாலும் மக்கள் இல்லாத சுடுகாட்டில் தான் தமிழீழம் கிடைக்கும். நீங்கள் ஒருவரும் தமிழீழத்திற்கோ அல்லது சுடுகாட்டிற்கோ திரும்பப் போவதில்லை. அழிக்கப்படுவது நாட்டில் வாழும் எம்மவர்கள் மட்டுமே.

புலிகளின் நோர்வேக் கிளையானது தற்போது நோர்வே அரசிற்கு தபால் அட்டையில் இலங்கை அரசைக் கண்டிக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றனர். பல நூறு தபால் அட்டைகள் தற்போது நோர்வேயின் மக்கள் அமைப்புக்களுக்கும், ஸ்தாபனங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. அத்தபால் அட்டையில் இலங்கைஅரசு தமிழ் மக்களைக் கொல்லுவதாகவும், அக்கொலையை நிறுத்துமாறு நோர்வே அரசு இலங்கை அரசைக் கோட்டுக் கொள்ளுமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது. கொலைகள் நிறுத்துப்படவேண்டும் உண்மைதான். நோர்வே அரசும் சர்வதேசமும் எம்போராட்டத்தை கண்காணிக்க வேண்டும் அதுவும் உண்மைதான். ஆனால் யுத்தத்திற்கு அரசு மட்டும் தான் காரணம் என நோர்வே அரசிற்கோ அல்லது சர்வதேச நாடுகளுக்கோ புலிகயோ அல்லது மற்றவர்களோ படம் படிக்க வெளிக்கிட்டால் எவருமே மக்கள் அழிவைப் பற்றியோ போராட்டத்தின் நியாயம் பற்றியோ கவனிக்கப்போவதில்லை. சர்வதேசக் கவனம் நம் மக்கள் மீதும், போராட்டத்தின் மீதும் திரும்ப வேண்டுமெனில் ஓரளவு மனிதாபிமான அடிப்படையிலான, பிரச்சாரம் அமைய வேண்டும். அதற்கு போராட்டத்தில் ஜனநாயகத் தன்மை சேர்க்கப்படவேண்டும். இல்லையேல் அழிவைத் தடுக்க முடியாது. கண்மூடித்தனமாக ஆதரவு கொடுப்பதை புலம்பெயர்ந்த மக்கள் நிறுத்த வேண்டும். புலம்பெயர்ந்த நாடுகளின் கவனத்தை எம் மக்கள் மீது திருப்ப ஜனநாயக சக்திகளுடன் இணைந்து நாம் குரல்கொடுக்க வேண்டும்.

படிப்பகம்